மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினைகளில் ஐயப்பாடுகள், தன்னிலை விளக்கம் கேட்டால் எல்லாம் இடம் பெறக்கூடாது என்பது விதிமுறை. இதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் அமரலாம்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Speaker இருக்கும்போது, இன்னொரு Speaker தேவையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து நான் ஏற்கெனவே தீர்ப்பு அளித்திருக்கிறேன். உறுப்பினர் அவர்களுக்கு நான் இதை அறிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவிப் பிரமாணம் பற்றி நீங்கள் தீர்ப்பளிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதவிப் பிரமாணம் என்றது உறுப்பினர்கள் பதவிப் பிரமாணமே தவிர, பேரவைத் தலைவருக்கான பதவிப் பிரமாணம் அன்று.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவிப் பிரமாணம் பற்றியும் உங்களுடைய பதில் வரவில்லை. தீர்ப்பு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதவிப் பிரமாணம் செய்து வைத்தாலும், ஒரு பேரவைத் தலைவருடைய பொறுப்பு முடிகிற கால கட்டத்திற்கு அடுத்த நொடியிலிருந்து தான் அடுத்த பேரவைத் தலைவர் பொறுப்பு ஏற்கிறார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையிலே இது தேவை என்று தலைவர் அவர்கள் கூறுகிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எந்த அடிப்படையிலே என்று சொல்லத் தேவையில்லை என்பது பேரவைத் தலைவருடைய நிலை. (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) ஆளுநர் உரை (ஆங்கில மொழிபெயர்ப்பு) யில் பிழைகள் உள்ளதாகக் குறிப்பிடப் பெறுவது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே பிழைகள் இருக்கின்றன. Translation-லும் பிழைகள் இருக்கின்றன. இதையெல்லாம் தாங்கள் அருள்கூர்ந்து பார்க்க வேண்டும். இதில் ஒழுங்கு பிரச்சினை இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை.

1989 பிப்ரவரி 13]

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தமிழிலிருந்து ஆங்கிலத்திலே மாற்றும்போது மாறுபட்டிருக்கிறது. தமிழிலே உள்ளது ஆங்கிலத்தில் மாறுபட்ட கருத்துள்ளதாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளுநர் அவர்களின் உரையின்மீது பேசுகிறபோது, அதைப் பற்றி விரிவாகப் பேசுவதற்கு நான் வாய்ப்பு அளிக்கிறேன். உறுப்பினர் அதற்கு திருத்தத் தீர்மானம் கொண்டுவர வழியிருக்கிறது. இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் எழவில்லை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அருள்கூர்ந்து ஆளுநர் உரையின்மீது விவாதம் வருகிறபோது, உறுப்பினர் என்னென்ன பிழைகள் என்று சுட்டுகிறாரோ அதற்கு அவை தக்கவாறு விடை சொல்லும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தமிழிலே உள்ளது ஆங்கிலத்தில் மாறுபட்டு உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு விதிமுறைகள் நன்றாகவே தெரியும். அந்த உரையில் ஏதாவது முரண்பாடுகள் இருக்குமானால், பிழைகள் இருக்குமானால், ஆளுநர் பேருரையின் மீதான விவாதத்தின்போது சுட்டிக் காட்டுவதற்கு முழு வாய்ப்பு இருக்கிறது. எனவே அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தினால் அந்தப் பிழைகளைப் பற்றித் தாராளமாக அடுக்கடுக்காகச் சுட்டலாம். அதை அவை ஏற்றுக்கொள்ளும். அதை அப்போதே எடுத்துக்காட்டாகச் சொல்லலாம், ஒப்பிட்டே சொல்லலாம்.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன் :

"ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெறவேண்டும் :

'1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் தேதியன்று சட்ட மன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.'"

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொழிந்த ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.